முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : **1591**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.02.2024**, செவ்வாய்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகளை உலகமெங்கும் படைக்க வேண்டி
ஞானபண்டிதன் என் சக்தியாக வந்த குருராஜனே
அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 23 ம் நாள், 06.02.2024, செவ்வாய்கிழமை)
2. வரமாக அரங்கன் உன் வழி உலகோர்க்கு
வல்லமைபட தீட்சைபலம் தருகின்றேன்
தருகவே உன் தொடர்பு கூட்டி
தக்கபடி அன்னதானத்தில் உதவி செய்து கொண்டு
3. பெருமைபட என் பூஜை செய்து
பேருலகில் உன் தீட்சை பெற்ற எல்லோர்க்கும்
எல்லோர்க்கும் ஆறுமுகன் என் ஆசியும் துணையும்
இணையில்லாத ஞான ஒளிகாட்சியும் உண்டுஉண்டு
4. உண்டான சர்வபலம் கூடி உலகோர்
உன் வழி இந்த உலகை மாற்றும் வித்தையை
நன்னயமாய் சுத்த சன்மார்க்க நெறிகொண்டு
நாடெங்கிலும் அன்னதான சேவை செய்துகொண்டே
5. செய்துகொண்டே உலகோர் அடைய நேரும்
சிறப்பான மார்க்கத்தை
மெய்ஞானமாக ஏற்று உலகோர்
முன்மொழிந்து உன் நாமஜெபத்தோடு உருவாக்கி வர
6. வருகின்ற மக்கள் அனைவருமே வருங்காலம் உணர்ந்து தெளிந்து
பெருமைபட ஆறுமுகன் என் ஆசியோடு
பிசகில்லா உலகமாற்றம் நிகழ்த்தி இனிதே
அச்சமற அரங்கன் அவதார நோக்கமாக அனைத்திலும் வெற்றி கண்டு
சிறப்பார்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–